O.S. 02 -2023

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண். 02 /2023

வாதி தரப்பு 2வது சாட்சி தியாகரஜன் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. கங்காலெட்சுமி, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிற து.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. தியாகராஜன் | வயது | : | 57/2026 |
| தகப்பனார் பெயர் | : | ராமையா | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | புதுக்கோட்டை | தொழில் | : | ஹோட்டல் காசாளர் |

நாள்-09.02.2026

வா.சா.2

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் ஹோட்டலில் கேஷியராக உள்ளேன். வாதி என்னுடைய நண்பர்.

2) பிரதிவாதியை எனக்கு ஞானவேல் மூலமாக தெரியும்.

3) வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எந்த ஆவணமும் பதிவு செய்யப்படவில்லை. அதில் ஒரு பத்திரம் பிரதிவாதி பெயரில் உள்ளது. இரண்டு பத்திரங்கள் பிரதிவாதியின் கணவர் பெயரில் உள்ளது.

4) பிரதிவாதி அந்த பத்திரங்களை வாதியிடம் கொடுக்கும்போது நான் நேரடியாக பார்த்தேன்.

5) பிரதிவாதி வீட்டில் வைத்து வாதி பணத்தை மொத்தமாக கொடுத்தார்.

6) முதலில் பிரதிவாதி கையெழுத்து போட்டார். பின்பு சாட்சி உமாமகேஷ்வரி கையெழுத்து போட்டார். அதன் பிறகு நான் கையெழுத்து போட்டேன்.

7) பிரதிவாதி கொடுத்த பத்திரங்களை நான் பார்த்தேன். அது பதிவு செய்யப்படாத பத்திரங்களா என்றால் ஆம்.

8) பிரதிவாதி பணம் திரும்ப கொடுக்கவில்லை என்ற விபரம் வாதி சொல்லித்தான் எனக்கு தெரியும்.

9) 29.06.2021-ம் தேதிய உறுதிமொழி பத்திரத்தில் பணத்தை வட்டியுடன் திரும்ப செலுத்தவில்லை என்றால் கிரையத்திற்கான உடன்படிக்கை எழுதி கொடுத்து, கிரையம் செய்து கொடுப்பதாக பிரதிவாதி எழுதி கொடுத்த விபரம் எனக்கு தெரியும். அது பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியாது.

10) பிரதிவாதியினுடைய வழக்கறிஞரிடம் பிரதிவாதி கேட்டு தெரிந்துகொண்டு, விஷயம் தெரிந்தபின்னர் ஆவணத்தை பிரதிவாதி எழுதி கொடுத்ததாக நான் உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மு.மா.நீ,

11)பிரதிவாதியிடம் நிரப்பப்படாத ஆவணங்களில் கையொப்பத்தை பெற்றுவிட்டு, பின்பு வாதி அதை நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள நிலையில் நான் வாதிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

12) வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே எந்த கொடுக்கல், வாங்கலும் கிடையாது என்றாலும், வெங்கட்ராமன் என்பவரிடம் கொடுக்கப்பட்ட ஆவணத்தை வைத்து வாதி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

13) நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.